
சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சி

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 279 ஆம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள்

பிலவங்க ௵ வைகாசி ௴ 12 ௳ வெள்ளிக்கிழமை



26—5—1967

ஸ்ரீ காசி மடம் : : திருப்பனந்தாள்

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூஜைத் திருநாளன்று

தெற்கே இராமேசுவரம் கன்னியாகுமரி முதல் வடக்கே இமயமலையில் 12,000 அடி உயரத்திலுள்ள திருக்கேதாரம் வரையிலுள்ள தலங்களில் நடைபெறும் அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு

தருமங்களின் விபரம்

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றவை

தொடர் எண்	மூலதனம் ரூபாய்	அன்னம்பாலிப்பு நடைபெறும் தலங்கள்	அன்னம் பாலிப்பு செலவுத் தொகை ரூ.	கண்காணிப்பவர்கள் விலாசம்
1	10,000	இராமேசுவரம்	350	ஸ்ரீ காசிமடம், சன்னிதித்தெரு, இராமேசுவரம்.
2	7,000	கன்னியாகுமரி	200	ஸ்ரீ காசிமடம், ஆச்சிரமம்.
3	5,000	திருச்செந்தூர்	140	திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L., ஸ்ரீவைகுண்டம்.
4	9,000	ஸ்ரீவைகுண்டம்	275	ஷை ஷை ஷை
5	5,000	திருநெல்வேலி	140	திரு. S. கல்யாணசுந்தரம் பிள்ளை, திருநெல்வேலி.
6	5,000	பழையபாபநாசம்	140	திரு. D. மரகதசுப்பிரமணிய பிள்ளை, அம்பாசமுத்திரம்.
7	5,000	திருக்குற்றாலம்	190	திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L., ஸ்ரீவைகுண்டம்.
8	5,000	உத்தரகோசமங்கை	140	திரு. M. V. ராகவேந்திரராவ், B. A., திவான், இராமநாதபுரம் சமஸ்தானம், இராமநாதபுரம்.
9	5,000	திருப்பெருந்துறை	140	திரு. S. முருகேசம் பிள்ளை, திருலோக்கி.
10	2,500	திருப்பத்தூர்	150	சிவஸ்ரீ சி. வ. பைரவசுந்தர குருக்கள், திருப்பத்தூர்.
11	2,50,000	மதுரை கன்னியாகுமரி ஆச்சிரமம் வகையுறு தருமங்கள்	500	சிவஸ்ரீ சிவதர்மபாஸ்கர, ம. க. சுந்தரேசபட்டர், மதுரை.

12	10,000	பழநி	285	ஸ்ரீ சிவகுமாரசுவாமிகள், ஸ்ரீ சாதுசுவாமிகள் மடம், பழநி.
13	5,000	விராலிமலை	140	திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
14	3,000	திருப்பாண்டிக்கொடுமுடி	150	திரு. கொ. மா. ராமசாமி, கொடுமுடி.
15	7,000	திருவானைக்கா	200	திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
16	6,000	திருவையாறு	190	திரு. அண்ணுசாமி பாகவதர், திருவையாறு.
17	7,000	சுவாமிமலை	200	திரு. N. R. ராமாநுஜம் B. A., கும்பகோணம்.
18	5,000	திருவிடைமருதூர்	140	Dr. A. சுந்தரம் L. I. M., திருவிடைமருதூர்.
19	1,00,000	திருப்பனந்தாள்	4,000	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
20	5,000	வேதாரண்யம்	140	திரு. S. P. வெங்கடராமையர், பெரி. அழ. மு. அன்னசத்திரம், வேதாரண்யம்.
21	5,000	திருப்புகலூர்	200	திரு. N. M. சோமசுந்தரம் பிள்ளை, திருப்புகலூர்.
22	7,000	திருவாரூர்	200	திரு. டி. சோமாஸ்கந்த தேசிகர், திருவாரூர்.
23	5,000	திருநாகைக்காரோணம்	220	திரு. S. சுப்பையா முதலியார், அத்திப்புலியூர்.
24	5,000	திருநள்ளாறு	140	திரு. குட்டியப்பபிள்ளை, ஷராப், ஸ்ரீ தர்பாரண்யேசுவரர் தேவஸ்தானம், திருநள்ளாறு.
25	5,000	காவிரிப்பூம்பட்டினம்	140	திரு. S. சம்பந்தம்பிள்ளை, கீழப்பெரும்பள்ளம்.
26	5,000	ஆக்கூர்	145	திரு. T. R. அகோரம் ஐயர், ஆக்கூர்.
27	10,000	மாயூரம்	285	திரு. G. S. பிள்ளை (கேதாரம் பிள்ளை), பல்லவராயன்பேட்டை.
28	7,000	வைத்தீசுவரன்கோவில்	200	திரு. R. S. ராமையாபிள்ளை, பூங்குடி முதலியார் சத்திரம், வைத்தீசுவரன்கோவில்.
29	5,000	சீர்காழி	145	திரு. வி. சுவேதாரண்யம் ஐயர், B. A., B. L., அட்வகேட், சீர்காழி.
30	5,000	ஆச்சாள்புரம்	200	திரு. S. நாகலிங்கம் செட்டியார், ஆச்சாள்புரம்.
31	20,000	சிதம்பரம்	150	ஸ்ரீ காசிமடம், சிதம்பரம்.
32	3,000	திருப்பாதிரிப்புலியூர்	100	திரு. V. P. சுப்பராய செட்டியார், திருப்பாதிரிப்புலியூர்.

35	7,000	திருவண்ணாமலை	265	திரு. தி. ஷண்முகசுந்தர ஓதுவார், திருவண்ணாமலை.
36	3,000	திருமாகறல்	210	திரு. M. D. நடராஜமுதலியார், மானேஜிங் டிரஸ்டி, திருமாகறலீசுவரர் தேவஸ்தானம்.
37	7,000	காஞ்சிபுரம்	200	திரு. க. சுப்பிரமணிய ஐயர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
38	7,000	திருக்கழுக்குன்றம்	200	ஷை ஷை ஷை
39	5,000	சென்னை	150	சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை.
40	5,000	திருவொற்றியூர்	140	திரு. க. சுப்பிரமணிய ஐயர், B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
41	5,000	வடதிருவாலங்காடு	140	திரு. மு. சபாபதி தேசிகர், வடதிருவாலங்காடு.
42	7,000	திருத்தணிகை	200	திரு. க. சுப்பிரமணிய ஐயர், B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
43	7,000	காளஹஸ்தி	200	ஷை ஷை ஷை
44	5,600	பிரயாகை	200	ஜோஷிமடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகள் மடம்.
45	10,000	வாரணாசி	400	ஸ்ரீ குமாரசுவாமி மடம், கேதாரகட்டம், வாரணாசி.
...	...	ஷை	500	[சாதுக்களுக்குப் பண்டாரா] ஷை ஷை
46	5,000	டில்லி	140	திரு. K. பாலகிருஷ்ண ஐயர், ஸ்ரீ சுவாமிநாதசுவாமி சேவாசமாஜம், புதுடில்லி.
47	8,500	ஹரத்துவார்	265	போலாநாத் ஆச்சிரமம், ஹரத்துவார்.
48	7,000	ரிஷிகேசம்	200	சிவானந்த ஆச்சிரமம், ரிஷிகேசம்.
49	7,000	திருக்கேதாரம்	275	ஸ்ரீ கணேஷ்சங்கர் வாஜ்பாய், கேதார்நாதபண்டா, கேதார்நாத். இமயமலை.
கூடுதல்	6,44,100		13,730	

உத்தரவுப்படி
வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
ஜூனியர், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

சிவ சிவ

Endowments created by His Holiness

Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal

Head of Sri Kasi Mutt, Tirupanandal

for feeding of Brahmins, Ascetics & the poor etc., on Sri Kumaragurupara Swamigal Maheswarapuja (Memorial) Day from Rameswaram & Kanyakumari in the south of India to Kedarnath situated at a height of 12,000 feet on the Himalayas in the north.

Serial Number	Capital Rupees	Places where feeding is conducted	Amount Spent. Rs.	Names of persons who supervise the feeding
1	10,000	Rameswaram	350	Sri Kasi Mutt, Sannithi Street, Rameswaram.
2	7,000	Kanyakumari	200	Sri Kasi Mutt, Achiramam,
3	5,000	Tiruchendur	140	Sri T. M. Kumaraguruparan Pillai, B. A., B. L., Srivaikuntam.
4	9,000	Srivaikuntam	275	do do do
5	5,000	Tirunelveli	140	Sri S. Kalyanasundaram Pillai, Tirunelveli.
6	5,000	Old Papanasam	140	Sri D. Maragathasubramanya Pillai, Ambasamudram.
7	5,000	Tirukkutralam	190	Sri T. M. Kumaraguruparan Pillai, B. A., B. L., Srivaikuntam.
8	5,000	Uttarakosamangai	140	Sri M. V. Ragavendra Rao, B. A., Dewan & Administrative Secretary, Ramnad Devasthanam, Ramanathapuram.
9	5,000	Tirupperunthurai	140	Sri S. Murugesam Pillai, Tiruloki.
10	2,500	Tiruppathur	150	Siva Sri Bhairava Sundara Gurukkal, Tiruppathur.

Ser Num	Rupees	is conducted	Spent. Rs.	Names of persons who supervise the feeding
11	2,50,000	Madurai (Kanyakumari etc. Charities)	500	Siva Dharmabhaskara Sivasri M.K. Sundaresa Bhattar, Madurai.
12	10,000	Palani	285	Sri Sivakumara Swamigal, Sri Sadhu Swamigal Mutt, Palani.
13	5,000	Viralimalai	140	Sri T. Pattusami Oduwar, Tiruchirapalli.
14	3,000	Tirupandikodumudi	150	Sri K. M. Ramaswami, Kodumudi.
15	7,000	Tiruvanaikka	200	Sri T. Pattusami Oduwar, Tiruchirapalli.
16	6,000	Tiruvaiyaru	190	Sri Annasami Bhagavathar, Tiruvaiyaru.
17	7,000	Swamimalai	200	Sri N. R. Ramanujam B. A., Kumbakonam.
18	5,000	Tiruvidaimarudur	140	Dr. A. Sundaram, L. I. M., Tiruvidaimarudur.
19	1,00,000	Tirupanandal	4,000	Sri Kasi Mutt, Tirupanandal.
20	5,000	Vedaranyam	140	Sri S. P. Venkatarama Iyer, Peri. Azha. Mu. Annasathiram, Vedaranyam.
21	5,000	Tiruppugalur	200	Sri N. M. Somasundaram Pillai, Tiruppugalur.
22	7,000	Tiruvarur	200	Sri T. Somaskantha Desigar, Tiruvarur.
23	5,000	ThiruNagaikaronam	220	Sri S. Subbiah Mudaliar, Athipuliyur.
24	5,000	Tirunallar	140	Sri Kuttiappa Pillai, Shroff, Sri Darbaranyeswarar Devasthanam Tirunallar.
25	5,000	Kaveripoompattinam	140	Sri S. Sambandam Pillai, Keezhaperumballam.
26	5,000	Akkur	145	Sri T. R. Agoram Iyer, Akkur.
27	10,000	Mayuram	285	Sri G. S. Pillai (Kedaram Pillai), Pallavarayanpettai.
28	7,000	Vaitheeswarankoil	200	Sri R. S. Ramayya Pillai, Poongudi Mudaliar Choultry, Vaitheeswarankoil.
29	5,000	Sirkali.	145	Sri V. Swetharanyam Iyer B. A., B. L., Advocate, Sirkali.

30	5,000	Achalpuram	200	Sri S. Nagalingam Chettiar, Achalpuram.
31	20,000	Chidambaram	150	Sri Kasi Mutt, Chidambaram.
32	3,000	Tirupathirippuliyur	100	Sri V. P. Subbaraya Chettiar, Tirupathiripuliyur.
33	5,000	Vriththachalam	210	Siva Sri S. Sambasiva Gurukkal, Vriththachalam.
34	5,000	Tirukkovalur	140	Sri K. M. Velayutham Pillai, Kilaiyur, Tirukkovalur.
35	7,000	Tiru Annamalai	265	Sri T. Shanmugasundara Othuvar, Thiruvannamalai.
36	3,000	Tirumagaral	210	Sri M. D. Nataraja Mudaliar, Managing Trustee, Magaraleeswarar Devasthanam.
37	7,000	Kanchipuram	200	Sri K. Subramanya Iyer B. A., Thiagaraja vilasam, Madras-5.
38	7,000	Tirukkazhukkunram	200	do do do
39	5,000	Madras	150	Chennapuri Annathana Samajam, Madras-5.
40	5,000	Tiruvotriyur	140	Sri K. Subramanya Iyer B. A., Thiagaraja vilasam, Madras-5.
41	5,000	Vada Tiruvalangadu	140	Sri M. Sabhapathi Desigar, Vada Tiruvalangadu.
42	7,000	Tiruthanigai	200	Sri K. Subramanya Iyer B. A., Thiagaraja vilasam, Madras-5.
43	7,000	Kalahasti	200	do do do
44	5,600	Prayag	200	Sankaracharya Swamigal Mutt of Joshi Mutt.
45	10,000	Varanasi	400	Sri Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi.
...	...	do	500	[SADHUS PANDARA] do do
46	5,000	Delhi	140	Sri K. Balakrishna Iyer B. A., Secretary, Sri Swaminathaswami Seva Samaj, New Delhi-16.
47	8,500	Haradwar	265	Bholanath Ashram, Haradwar.
48	7,000	Rishi Kesh	200	Sivanantha Ashram, Rishikesh.
49	7,000	Kedarnath	275	Shri Ganesh Shankar Vajapai, Kedarnath Panda, Kedarnath, Himalayas.
Total	6,44,100		13730	

By order of His Holiness

... KAN ... MU ... K 'MARASWAM' ... AMBIRAN

ഉ

SIVA SIVA

Saint Kumara Gurupara Swamigal

Saint Kumaraguruparar was born at Srivaikuntam. He got the power of speech in his fifth year by the blessings of Sri Senthilandavan at Tiruchendur and sang Kandarkalivenba. He sang at Madurai in praise of Goddess Meenakshi, a Pillai Tamil and he was garlanded by the Goddess with a pearl necklace. At the request of King Tirumalai Naik, he then composed Neethineri vilakkam, a moral code for inculcating wisdom to mankind. At Dharmapuram he was initiated by Sri Masilamani Desikar in the saintly order of the Dharmapuram Athinam and there he improvised Pandara Mum manikkovai in praise of that Pontiff. While he visited the holy shrines of Tiruvarur, Vaitheeswarankoil and Chidambaram, he sang Nanmanimalai, Pillai Tamil, and Mummanikkovai. He then went on pilgrimage to Benares where he improvised Sakalakalavallimalai in praise of the Goddess of Learning, and also sang Kasikkalambagam. He rode on a live lion when he interviewed the Padusha at Benares and the Padusha, having been deeply and devoutly impressed by the greatness of the Swamigal, very liberally helped the Saint in all his activities viz., erection of Kedarghat and Kedareeshwar Mandir on the west bank of the Ganges and founding a Charitable institution nearby.


Blessed be the eyes that see the Cosmic Dance in the Golden Hall!
Blessed be the ears that hear the prowess of the Lord!
Blessed be the head that bows to Him!
Blessed be the mouth that sings in praise of Him!

(Chidambara Cheyyutkovai
—St. Kumara Guruparar)

In addition to the feeding conducted at 49 places from Cape Comorin to the Himalayas, Thevara Akanda Parayanam (continuous recital of Thevarams) is conducted on Sri Kumaragurupara Swamigal's day at Madurai for 24 hours from 6 A. M. on 26—5—67 at a cost of about Rs. 1500/-.

உ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்ற நிதிகளின்படி "ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு" நடைபெறும் இடங்கள்



1 Thirukedaram
2 Rishi Kesh
3 Haradwar
4 Prayag
5 Varanasi
6 Kalahasti
7 Tiruthanigai
8 Vada Tiruvalangadu
9 Kanchipuram
10 Tirukkazhukkunram
11 Madras
12 Tiru Annamalai
13 Chidambaram
14 Achalpuram
15 Kaveripoom pattinam
16 Sirkali
17 Vaitheeswaran koil
18 Akkur
19 Mayuram
20 Tirupanandal
21 Swamimalai
22 Tiruvaiyaru
23 Tiruppugalur
24 Tiruvarur
25 Vedaranyam
26 Tiruvanaikka
27 Palani
28 Madurai
29 Tirukkutrala
30 OldPapanasa
31 Tirunelveli
32 Srivaikuntam
33 Tiruchendur
34 Rameswaram
35 Kanyakumari
36 Tirupperun thur
37 Viralimalai
38 Tiruvidaimar du
39 Tirunallar
40 Tirukkovalur
41 Tiruvotriyur
42 New Delhi
43 Uttarakosa manga
44 Nagappattina
45 Vriththachala
46 Tirupathirip puliy
47 Tirumagaral Tiruppathur Tirupandiko mu

உ

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் காபாலீச் சுரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்(கு)
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய். — சம்பந்தர்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

— பெரியபுராணம்

படமாடக் கோயிற் பகவற்(கு) ஒன்றியில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்(கு) ஒன்றியில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

தண்டறு சிந்தை தபோதனர் தாம்மகிழ்ந்(து)
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டதென்(று)
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே. — திருமூலர் திருமந்திரம்

சிவனை யர்ச்சனை செய்பவர்க்(கு) இசைவன செய்தோர்
அவனெ னக்குறித்(து) அடியரைப் பூசைசெய்(து)ஆறு
சுவைய இன்னமு(து) அருத்தினோர் தொண்டர்தம் பணியே
தவமெனப் புரிந்(து) உயர்ச்சியைச் சார்ந்தவர் இவர்காண்.

— திருவிளையாடற் புராணம்

பிரம சாரியைப் பேரறம் ஓங்கிடும்
கிரக சாரியை பூட்டிய கேண்மையர்
விரவி யேசிவ லோகம் விரும்பிய
பரம போக மனைத்தும் பயில்வரே. — சிவதருமோத்தரம்

திருச்சிற்றம்பலம்

தேவார அகண்ட பாராயணம்

26-5-67 உ காலை 6மணி முதல் இரவு 8 மணி வரை மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் பொற்றாமரைக் கரையிலும், இரவு 8மணி முதல் மறுநாட் காலை 6 மணி வரை ஆவணி மூல வீதிகளிலும் ரூ. 1500/- செலவில் தேவார அகண்டபாராயணம் நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 18 | பிலவங்க ஞூ வைகாசித் திங்கள் 1ம்உ [15–5–67] | இதழ் 5

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 10)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

எனைத்துணைய வேனும் யிலம் பாட்டார்கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம் மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்.

எவ்வளவு பெருக்கத்தையுடையன வாயினும் வறுமையுடையவர் கல்வி தினையளவும் கணமுறுதல் இலவாம். மனைக் குத்தக்க வாழ்க்கை நடாத்தத் துணையாக வந்தவள் அதற்

குரிய நற்குணங்களும் நற்செய்கைகளும் இல்லாதாள் ஆயின, மணமகன் நல்லறம் ஆகப் பூண்டன (யாவும்) புலப்படா. அவ் வில்லறத்தான் நல்லறமாகப் பூண்டன எல்லாம் தினையளவும் உலகிற் புலப்படா தொழிவன போல வறியனது கல்வியும் சிர்ப்படா தொழியும்.

தமிழ்த் தெய்வத்தின் குறிப்புரையில் இப்பாட்டிலும் முற் பாட்டிலும் 'பூண்ட' 'கைத்தலம், என்றவற்றைப் பெயரெச்ச மாகக் கொள்ளாமையையும் 'மேற்கொண்டனவாகிய நல்ல றங்கள் என்றும்' 'கைத்தலத்தன வாகிய கருந்தனத்தை' என்றும் எழுதியிருப்பவற்றையும் அறிதல் வேண்டும்.

புகழுடலில் விளங்குங் சிதம்பர ராமலிங்கப்பிள்ளை குறிப் புரையில், "பூண்ட நல்லறம் மேற்கொண்டனவாகிய நல்ல அறங்கள் இவ்வாறு கொள்ள அறியாதார் 'கைத்தலத்த கருந் தனம்' 'பூண்ட நல்லறம்' என்பனவாக வருபவைகளைப் பெய ரெச்சத் தொடராகவைத்துப் பொருள் கொள்ப. பெயரெச்சத் தொடருள் யாண்டும் எச்சச்சொல் முன் வருதலேயன்றி முடிக் குஞ் சொற்குப் பின் வருதல் இல்லை என்பது அவர் அறிகிலர்," என்றெழுதப்பட்டுளது.

இவ்வாறு இருவரும் எழுதியவற்றை யுணர்வார்க்கு முற் கட்டுரைக்கண் நாம் எழுதியது முற்றும் பொருந்துமென்பது தெளிவாகும்.

இப்பாட்டில் முக்கியப் பொருள் இரண்டுள. அவற்றுள் ஒன்று இங்கு எடுத்துக் கொண்ட பிரசங்கமோ பிரகரணமோ கல்வியாதலின், அதனைப் பொருளாக வைத்து, கிருஹஸ்தப்ர கரணம் கூறும் (78-90) ஆண்டுக் கூறப்படத்தக்கதாகிய மற் றொன்றை ஈண்டு உவமமாக வைத்துணர்த்தினர் ஆசிரியர். 'புலப்படாபோல் சிர்ப்பாடிலவாம்' என்றதால் அவ்வாருதல் வெளிப்படை.

எத்துணையவாயினும், (5) எனைத்துணையராயினும் (89) எனைத்துணையும் எனலும், 'பூணடபுலப்படாபோல்' (10) என்பது போல், 'புல்லுருவஞ்சுவபோல் (23) 'கொல்லுங் கவயமாப்போல்' (75) 'செலவு பிழைத்துய்ப்பபோல்' (92) எனச் செய்யுளை முடித் தலும் இவ்வாசிரியர்க்குள்ள முறைமைகளுள் அடங்குவன.

'எனைத்துணையதேனும்' 'சீர்ப்பாடிலதாம்' என்று ஒருமையாக்கிய உரையும் பண்டிருந்தது போலும். சு. அ. கு. உரைபார்க்க. 'எனைத்துணைய' என்பது சொல்லாற்றலாலும் தினைத்துணையும்' என்றதாலும் பெருக்கத்தைக் குறித்தது. 'ஏனும்' என்பது எனினும் என்றதன் மரூஉ. பிருண்டு ஆயினும் என்றது ஆனும் என்று மருவிற்று. "நட்ட சுரிகையாற்கானும் சுலாக் கோலாற் கானும் சொரிவதாம் ஆபோற் சுரந்து" (அறநெறிச்சாரம்; 183) என்றதிற் காண்க. அதன் உரைக்குறிப்பிற் சாரியைகள் என்றதும் அறிக.

'இலம்பாடு' :– தொல்காப்பியம் எழுத்ததிகாரப் புள்ளி மயங்கியலில், 'இலமென் கிளவிக்குப் படுவருகாலை நிலையலும் உரித்தே செய்யுளான' என்னும் நூற்பா, இத்தொடர்க்குரிய இயலையுணர்த் திற்று. 'இலம்' என்னுஞ் சொல்லின் முன்னர்ப் 'படு' என்னுஞ் சொல் வருமொழியாய் வந்து புணரின், (மகரவிறுதி துவரக் கெடும் என்ற விதி நேராது) மவ்வீறு கெடாது நின்று முடி தலும் செய்யுட்கண் உரித்து என்றவாறு. 'இலம்படுபுலவர் ஏற் றகை நிறைய' என்னும் ஓர் எடுத்துக்காட்டிற் புலவர்க்கே இலம் பாடு உரியது எனல் புலப்படுத்தியவாறு காண்க. இதற்கு இளம்பூரணர் கூறிய உரையாவது இது:–

"உரிச்சொல்லாகலான் உருபு விரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவர் என்னும் பொருள் உரை நிற்றலின் வேற்றுமை முடிபாயிற்று."

நச்சினார்க்கினியர் உரை:– 'இல்லாமை என்னும் குறிப் பாகிய உரிச்சொற்கு, உண்டாதலென்னும் வினைக் குறிப்புப்பெயர் (படு என்னுஞ் சொல்) வரும்" என்றும் உரையில் எழுதினர். இதில் 'இலம்' என்றதற்கும் 'படு' என்றதற்கும் விளக்கம் எழு தினர். எடுத்துக்காட்டாக 'இலம்படுபுலவர் ஏற்றகை நிறைய' என்னும் மலைபடுகடாத்துப் பாட்டடியையே காட்டி, இதற்கு இல் லாமை உண்டாகின்ற புலவர் எனப்பொருள் கூறுக என வியங்கொண்டு பணித்தார். 'இலம்பாடு நாணுத்தரும்' என்ற சிலம்பு மொழிகாட்டி, 'இல்லாமை உண்டாதல் நாணுத்தரும் என்று பொருள் கூறுக' என்றார். 'இதனை நெற்பாடு போலக் கொள்க. இது பொருளிலம் என முற்றுவினைச் சொல்லாமாறும் உணர்க' என்றார்.

"இதனை இலத்தாற் பற்றப்பட்ட புலவர் என வேற்றுமை யென்முரால் உரையாசிரியர் எனின், பற்றப்பட்டபுலவர் என்பது பெயரெச்சமாதலிற் பற்ற வென்னுந் தொழில் தோற்றுவிக் கின்ற முதனிலைச் சொல்லைச் சூத்திரத்து ஆசிரியர் எடுத் தோதுற்றிலர் ஆதலானும் படு என்பது தானும் புலவர் என்னும் பெயரோடு முடியுங்கால் இரண்டு காலமுங் காட்டும் ஈறுகள் தொக்க முதனிலைச் சொல்லாய் நிற்றலின், அதனை எடுத்தோதி னுர் ஆதலானும் ஆசிரியர்க்கு அங்ஙனம் கூறுதல் கருத்தன்மை உணர்க. அன்றியும் பற்றப்பட்ட என்புழி இரண்டு முதனிலை கூடி ஒன்றுய் நின்று பற்றுதலைச் செய்யப்பட்ட எனப் பொருள் தாராமையானும் அல்வழியதிகாரம் ஆதலானும் அது பொரு ளன்மை உணர்க." (நச்சினர்க்கினியம்).

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உரியியலில், 'இலம் பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை, என்றெரு நூற்பாஉளது. ஆண்டும் எடுத்துக் காட்டாக மலைபடு கடாத்தின் அடியே அமைத் துளது. இலமபாடென்பது வறுமை என்னுங் குறிப்புணர்த் தும் என்றும் "இலம் என்னும் உரிச் சொல் பெரும்பான்மையும் பாடென்னுந் தொழில் பற்றியல்லது வாராமையின் இலம்பாடு என்முர்" எனறும் சேனுவரையததுள்ளமை காண்க. இளம் பூரணரும் சேனுவரையரும் நச்சினர்க்கினியரும் 'இலம்'என்பது உரிச்சொல் என்றே உரைத்தனர். "அவ்வீற்றுரிச்சொல்" (மவ்வீற்றுரிச் சொல்) "உரிச்சொல்லாகலான் உருபு விரியாது" என்றும் 'இலமென்னும் உரிச்சொல்" என்றும், "இலம் என்பது முற்று வினைச் சொல்லாகாது குறிப்பாகிய உரிச் சொல்லாய் நிற்கும்" "இல்லாமையென்னுங் குறிப்பாகிய உரிச்சொல்" என்றும் அவ் வுரைகளுள் எழுதியிருத்தலறிக. அவற்றை அறியாது, *"இலம் பாடு இன்மை என்னும் பண்படியாகப் பிறந்த பெயர். இலம்பாட்டார் என்பதில் இலம்பாடு பகுதி. ஆர் பலர் பால் விகுதி. பாடு உடம்பாடு கடப்பாடு என்புழிப் போலத் தன்மை என்னும் பொருள்படும். ஆகவே இஃது இன்மையாதல் என்று பொருள் படும்." எனறுரையெழுதியது வியப்பாக்கும். "இலம் நலம் என்பது போல அம் விகுதிப் பண்புப் பெயர். இபபணபுப் பெயர் பெரும்பாலும் பாடென்னுந் தொழிற் பெயரைச் சார்ந்தேவரும் என உணர்க" எனறும் உரைத்திருக்கிறது. இஃது எப்படி பொருந்

தும்? சேனுவரையத்தைப் பார்த்தறிந்ததாயினும் ஆராயா தெழுதியதே. 'இல்லாமை உண்டாதல்' என்பதே பழையவுரை. 'இல்லாமை உண்டாகின்ற புலவர் எனப் பொருள் கூறுக' என்னும் நச்சினர்க்கினியமும் ஈங்கு நினைத்தற்குரியது. 'இல் லாமை உண்டாதல் நாணுத் தரும் என்று பொருள் கூறுக.' என்றும் சிலப்பதிகாரச் சொற்றொடர்க்குரைத்தார் ஆவர்.

'இன்மை என்னும் பண்பு' என்றதும் ஆராயத்தக்கது. சேனு வரையர் (வினையியல் 17) 'இன்மைபொருட்குமறுதலையாகலின்' பொருளின் கட் கிடக்கும் பண்பெனப்படாது. அன்மையும் உண்மையும் பண்பிற்கும் ஒத்தலின் பண்பு எனப்படா; குணத் திற்குக் குணம் இன்மையின் என்றுரைத்தார். நல்+அம்= நலம், பொல்+அம்=பொலம், வல்+அம்=வலம் நில்+அம்= நிலம், உள்+அம்=உளம், வள்+அம்=வளம், குள்+அம்= குளம், என்பன போல இல்+அம்=இலம் என்றுதல் தமிழ் மரபு. 'குளித்தல்' என்பதிற் குள்+இ=குளி, குள்+து= குண்டு (ஆழம்).

'இலம்பாடு' என்றசிற் 'பாடு' என்றது 'படு' என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இதுபோலுந் தமிழ்ச்சொல் அளவில உள. கெடு–கேடு, அடு–ஆடு, தொடு–தோடு, விடு–வீடு, எடு–ஏடு, ஒடு–ஓடு (மூன்றனுருபு) முதலியன காண்க, நாட்டுதல் என்றதன் முதனிலை நாட்டு என்பது. அது பிற வினைக் குரியது. அதற்குத் தன்வினை யாது? நாடுதல் ஆமோ? நடுகல்–நாட்டுகல் என்றவற்றிற் காண்க. உண்–ஊண், கொள்–கோள், மின்–மீன், தின்–தீன், கண்–காண் முதலி யனவும் முதனீட்சியவே.

'சீர்ப்பாடு' :– சீர்ப்படு என்னும் முதனிலை நீண்ட தொழிற் பெயர்' என்றோருரையுண்டு. சீர்ப்படு என்றொரு முதனிலை கொள்வது எற்றுக்கு? சீர் என்னுஞ் சொல் வேறு. படு என்னுஞ் சொல் வேறு. படு நீண்டதா? சீர் நீண்டதா? 'பிழைபாடு' என்ற தற்குப் பிழைபடு என்பதோ முதனிலை? சீர்ப்பாடும் பிழைபாடும் முரண்பாடுறுந் தொடர். சீர்திருத்தம் என்பர் இக்காலத்தார் பலர், சீரைத் திருத்தின் பிழையாகும். பிழையைத் திருத்தின் சீராகும். பிழைதிருத்தம் இரண்டன்றொகையாதல் போலச் சீர்

திருத்தமும் அத்தொகையேயாம். இக்காலத்தில் உலகையும் உலகிற் பண்டைய நிலைகளையும் சீர்திருத்தம் செய்வதாகச் சொல்லி விளைத்துள்ள பிழைகளைத் திருத்தத் திருவருள் என்று எவ்வாறு முன் நிற்குமோ? சீராக்கம், சீர்ப்பாடு, சீர்ப்படுத்து என்னும் வழக்கு முன்னர் இருந்தமைக்கு இப்பாட்டில் அத் தொடர் நின்றதும் ஒரு சான்றன்றோ? சீர்–கனம் 'சீர்தூக்குங் கோல்'. இங்கு, மேன்மை, 'கனவான்', 'கல்விமான் கனவான்' (வழக்கு).

கல்வி:– இப்பெயர் 'இலவாம்' என்னும் பன்மை வினைக்குத் தகப் பன்மைப் பொருள் பயப்பது. கல்விகள் எனல்தகும். கல்வி நலன்கள் எனல் தகாது. கல்வி வகையனைத்தும் ஈண்டுக் கரு தப்படும். முன்னர்க் 'கல்வியிடமறிந்துய்த்துணர்வில்லெனின் இல்லாகும்' என்றார். 'இன்றெனின் இன்றாகும்' என்றாரல்லர். '(ஏதிலான் பாற்கண்ட இல்லினும்(நெடும்பகல்......உட்குவருங்) கல்வி பொல்லாது' என்றார். அதிலே 'கற்ற' எனப் பன்மை யாகச் சொல்லப்பட்டவற்றையும் முற்பாட்டில் 'வருந்தித் தாங் கற்றன' எனச் சொல்லப்பட்டவற்றையும் நோக்கிக் கற்ற நூற் பொருள்களைக் கோடலும் தக்கது.

இலம்பாட்டார் கல்வி தினைத்துணையுஞ் சீர்ப்பாடின்மைக்கு மாண்பில்லா மனையாளையுடையார் நல்லறம் புலப்படாமையை உவமையாக்கினார் இங்கு.

திருவிளையாடற்புராணத்திலே பரஞ்சோதி முனிவர் நல் லார் இடை புலப்படாமைக்கு இலம்பாட்டார் கல்வி புலப்படா மையை உவமம் ஆக்கி,

'கலைக்குரை விரிப்பா ரென்ன வறுமையிற் கல்விபோலப்
புலப்படா மருங்குல் நல்லார்' *(தடாதகைப் பிராட்டியார் 58)*

என்று அழகுறப் பாடினார். இடைபுலப்படாமையும் வறிஞர் கல்வி புலப்படாமையும் ஒன்றென்றார் பரஞ்சோதி முனிவர். அவ்வாறு புலப்படாத இடைக்கு நம் குமரகுருபர முனிவரர் காட்டிய ஒன்று இங்கு மிக்க சிறப்புடையதாய் விளங்குவது அறிந்து இன்புறத்தக்க வாறமைந்த வாக்கியம் ஈது:–

"மணிவடஞ் சுமந்த புணர்முலைக் கொதுங்கி
ஈயா மாக்கள் தீமொழி கவர்ந்த
சிற்றிடை படைத்த பேரமர்க் கண்ணியர்"

(பண்டார மும்மணிக்கோவை. 5)

என்பதில், பேரமர்க்கண்ணியர் சிற்றிடை, ஈயா மாக்கள் தீமொழி கவர்ந்தது என்று சொல்லினுர். 'இல்லை' என்பது ஈயார் தீயுரை; அச்சொல் 'இடையில்லை' என்னுந் தொடரில் உறவழங்கும் வழக்கும் அதனால் இல்லை என்னுஞ்சொல்லை இடை கவர்ந்ததும் கவரவே ஈயாமாக்கள் தீமொழி (இல்லை என்பதும்) மருத நில மகளிர் சிற்றிடை இரண்டும் ஒன்றேயாம் என்றதும் அவர் உணர்த்துவன.

நல்லறம் :— சிதம்பர மும்மணிக்கோவை முதலகவல் (25–31) காண்க. 'இது வடசொல் விரவாத தனித்தமிழ் வெண்பாவாதல் காண்க' என்றெழுதினுர் பருதிமாற் கலைஞர் என்னும் பழம்பெரும் புலவர்.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

மலர் 18, இதழ் 4-ன் தொடர்ச்சி

அரனெறியில் சுடரொளி தோன்றல்

Vision of Light Effulgent in the Path of Saivam

146. ஈரு மனத்தை யிரண்டற வீசுமின்
ஊருஞ் சகாரத்தை ஓதுமின் ளோதியே
வாரு மரனெறி மன்னியே முன்னியத்
தாருஞ் சுடரொளி தோன்றலுமாமே.

Still thy wandering thoughts;
Chant the sacred syllable 'Si'
And so persevere in the path of Hara
Thou shall envision the Primal light Effulgent.

சிதைவுறும் மனத்தை ஒருமைப்படுத்துக; சிவமந்திரத்தை ஓதுக; ஓதி சிவநெறியில் நிலைத்து நிற்க; பின்னே ஆதியாம் இறையொளி வெளிப்படும்.

சிவநெறியில் தோன்றுவன

Vision through Saiva Path

147. மினற்குரியாளனை வேதியர்வேதத்
தனற்குரியாளனை ஆதிப்பிரான்தன்னை
நினைக்குரியாளனை ஞானக்கொழுந்தின்
நயக்குறிகாணின் அரனெறியாமே.

He that belongeth to the Lady of lightning Form
He that belongeth to the Vedic fire of Brahmins
He that belongeth to them that think of Him
He, the Primal Lord
He, the tender shoot of Gnana,
—An thou glimpseth the loving signs of Him
Then hath thou walked in the path of Siva

மின்னற்கொடி போலும் உமைக்குரியானை,அந்தணர் வேட்கும் வேத முத்தீக்குரியானை, தன்னை நினைப்பவர்க்குரியானை, ஞானக் கொழுந்தினை, ஆதியாம் தலைவனை—இங்ஙனமாகும் இறைவனின் அன்பு அடையாளங்களைக் காண்கில் – அதுவே சிவநெறி கைவந்ததாகும்.

Adoration of Siva is Bliss

சிவன் சேவடி தொழுதலே இன்பம்

148. ஆய்ந்து ணரார்களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்து ணராவகை நின்ற; அரனெறி
பாய்ந்துணர் வார் அரன் சேவடி கைதொழு
தேர்ந்துணர் செய்வதோர் இன்பமுமாமே.

They that discriminated not
Knew not Hara's Path;
Their souls in myriad machinations caught,
The Truth saw not;
They that followed Hara's Path
Of a certain reached His Feet of Grace,
And joyed the bliss, all senses uplifted.

சிவநெறியே மெய்ந்நெறி யென்று ஆராய்ந்து உணராதோர் ஆன்மா, பல சிக்கல்களில் இடர்ப்பட்டு உழலும்; சிவநெறியைத் தெளிந்தறிந்தவர் அரன் திருவடியைத் தொழுது, உண்மை அறிவானந்த நிலையினை அடைகுவர்.

(தொடரும்)

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உரை நடை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 18. இதழ் 4-ன் தொடர்ச்சி)

பிள்ளை மதிசெஞ் சடைச்செருகும்
　　பெருமா னுர்க்கு முலகேழும்
　பெற்ற தாய்க்கு நீயருமைப்
　　பிள்ளை யெனினெம் பேராய
வெள்ள மமைத்த சிறுசோறு
　　வேண்டி னிடுகே மலதெளியேம்
　விளையா டிடத்துச் சிறுகுறும்பு
　　விளைத்தாற் பொறுக்க விதியுண்டோ
கள்ள விழிச்சூ ரரமகளிர்
　　காமன் கொடியேற் றெனவியப்பக்
　கற்ப தருவிற் படர்ந்தேறு
　　காமர் கொடிச்செங் கயல்பாயும்
தென்னு புனற்கா விரிநாடா
　　சிறியேஞ் சிற்றில் சிதையேலே
　செந்நெற் பழனப் புள்ளூரா
　　சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 78

பிறைத் திங்களைச் சிவந்த சடையிலே செருகியிருக்கின்ற சிவபெருமானுக்கும் ஏழுலகங்களையும் ஈன்ற தாயாகிய உமா தேவிக்கும் நீ அருமைப் பிள்ளை யென்றால் எங்களது பெரிய விளையாட்டுக் கூட்டத்தினர் அமைத்த சிறு சோற்றை நீ விரும்புவாயானால் உனக்கு இடுகின்றோம். அல்லாமல் எளியோங்களது விளையாட்டிடத்தில் சிறு குறும்பு செய்வாயானாலும் அதனைப் பொறுக்க எங்களால் முடியுமோ? கள்ளம்

பொருந்திய கண்களையுடைய சூரரமங்கையர், காமவேளினது திருவிழாவிற்குரிய கொடியேற்றம் என்று வியப்படையும்படி கற்பக தருவிற் படர்ந்தேறுகின்ற காமவல்லியில் செங்கயல்கள் பாயும்படியான தெளிந்த நீரையுடைய காவிரி நாட்டையுடையவனே! சிறியேங்களது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக. செந்நெல் நிறைந்த வயல்களையுடைய புள்ளூரனே! சிறியேங்களது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக.

மடல்வா யவிழ்ந்த குழற்பேதை
ஒருத்தி திருத்தும் பகிரண்ட
மணற்சிற் றிலையோர் கணத்தின்கண்
மட்டித் தாடு மைந்தனருள்
விடலாய் தமியேஞ் சிற்றின்முற்றும்
விளையாட் டாக வொருநீயும்
வீட்டா நிற்பத் தொடங்கினையால்
வித்து முளையும் வேறன்றே
கடமா மருப்பும் சுடர்மணியும்
கதிர்நித் திலமு மகளிர் முலைக்
களபத் தொடுகுங் குமச்சேறும்
கரைத்து விடுத்தக் கடற்குட்டம்
திடராச் செயுங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 79

இதழ் விரிந்தவிழ்ந்த மலர்கள் சூடிய கூந்தலையுடைய உமாதேவியாகிய நங்கை திருத்தமாக அமைத்த காணப்படுகின்ற அண்ட கோளமாகிய மணற் சிற்றிலை ஒருகணப் பொழுதில் தேய்த்து விளையாடுகின்ற பேராற்றலையுடைய சிவபெருமானருளிய இளஞ்சேயே! நமியேங்கள் கட்டிய சிற்றில்களை யெல்லாம் விளையாட்டாக ஒப்பற்றவனாகிய நீயும் அழிக்கத் தொடங்கி விட்டாய். விதையும் முளையும் வேறுபட்டிருக்க முடியாதல்லவா? மதமிக்க யானைக் கொம்புகளும் ஒளியையுடைய மணிகளும் வெண்மையான முத்துக்களும் பெண்களது கொங்கைகளிலே பூசப்பெற்ற களபத்துடன் கரைத்துக் கூடிய

குங்குமச்சேறும் ஒன்று சேர்ந்து கடலாழத்தை மேடு படுத்துகின்ற காவிரி நாட்டையுடையவனே! சிறியேங்களது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக. செந்நெல் நிறைந்த வயல்களையுடைய புள்ளூரனே! சிறியேங்களது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக.

வாமாண் கலைப்பே ரகலல்குல்
மடமா னேக்கி னரமகளிர்
மகிழ்பூத் திருப்பப் புத்தேட்கு
வந்த விடுக்கண் மாற்றினையால்
கோமா னினக்கப் பெருந்தேவர்
குலமே யன்றி யடியேமும்
குற்றே வலுக்கா மகம்படிமைக்
குடியாக் கொண்டாற் குறையுண்டோ
காய்மாண் குலைச்செவ் விளநீரைக்
கடவுட் சாதி மடநல்லார்
கதிர்ப்பூண் முலையென் றேக்கறப்பைங்
கமுகு நகைவாண் முத்தரும்பும்
தேமாம் பொழிற்றீம் புனனுடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 80

பெரிய அல்குலையுடைய தாவுகின்ற சிறந்த இளைய கலைமானின் பார்வையைக் கொண்ட தேவமாதர்கள் மகிழ்ச்சி மிகுந்து இருக்கும்படி தேவர்களுக்கு வந்த இடையூறுகளை நீக்கினாய். கோமானாகிய உனக்கு அந்தப் பெரிய தேவர் குலத்தை யல்லாமல், அடியேங்களையும் குற்றேவலுக்காகின்ற அணுக்கத் தொண்டு புரியும் அடியார் குடியாகக் கொண்டால் குறை வந்து விடுமோ? காய்கள் நிறைந்த குலைகளிலுள்ள செவ்விளநீரை தேவ சாதியாரின் இள நங்கையரது ஒளிமிக்க அணிகலங்கள் சூடிய கொங்கைகள் என்று ஏமாந்து நிற்பப் பசிய கமுகு மரங்கள் நகைப்பது போல ஒள்ளிய முத்துக்களைச் சொரிகின்றதேமா மரங்கள் நிறைந்த சோலைகளையுடைய இனிய நீர் நாடனே! சிறியேங்களது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக. செந்நெல் நிறைந்த வயல்களையுடைய புள்ளூரனே! சிறியேங்களது சிற்றிலைச் சிதையாதிருப்பாயாக.

(தொடரும்)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 18, இதழ் 4-ன் தொடர்ச்சி]

IV
MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

IN the days when the powerful Pandyan Kings flourished in Madura, there was once a prime minister who early became convinced of the transitoriness of this world's life and its riches. When on a visit to Perundurai, now Avudaiyarkoil in the Tanjore District, he suddenly and completely came under the influence of a Brahman religious teacher, who for him was the manifestation of the very God Himself. Then and there he began to sing the "Sacred Utterance" (Tiruvasaham), and was named by his preceptor "Utterer of Jewels" (Manikka vasahar) Returning to Madura, he forsook his high office with all its rewards. to become a religious poet wandering without earthly attachments from shrine to shrine. The stories clustering around his religious experience can be read by English readers in Dr. Pope's great edition of his work. We find him practising austerities at Chidambaram, or miraculously giving the gift of speech to the dumb daughter of the Chola king, or defeating in disputation a band of Buddhists from Ceylon, but of certain historical information about him we have practically none. Even the question. of the century in which he lived is a battle-ground of the antiquarians. Tradition places him in the fifth century, earlier than the writers of the Devaram; but the opinion of scholars seems to be converging on the view that he lived in the latter half of the ninth, or the first half of the tenth century of our era. Another of his works is the Tirukkovaiyar, an erotic poem of four hundred stanzas. Among Tamil Saivite writers none makes a stronger devotional appeal than Manikka

Vasahar. There is a common Tamil saying that nothing can melt the heart of the man who is not melted by the Tiruvasaham.

Stanzas 80–92 are samples from an opening poem of one hundred stanzas, each ten of which has its own metre and is fairly complete in itself. They fairly reflect the saint's varying moods. Notice the importance he attaches to emotion; his worst self-reproach is for feeling no frenzy. As to his conception of God, see how the word 'grace' recurs in nearly every stanza. And yet that God of grace is called (in No 84) both being and non-existence.

80. மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்க
ழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்
பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்
றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டு
கொள்ளே.

THE HUNDRED VERSES

80. Thrills and trembles my frame;
Hands are lifted on high;
Here at Thy fragrant feet,
Sobbing and weeping I cry;
Falsehood forsaking, I shout,
"Victory, victory, praise!"
Lord of my life, these clasped hands
Worship shall bring Thee always.

—— (To be continued)

உ

சிவமயம்

இளையான்குடி, ஸ்ரீ மாற நாயனர் புராணம்

இஃது

இளையான்குடி வேதாந்தமடம்

இராமேஸ்வரம் சிவாஸ்ரமம்

இவற்றின் ஸ்தாபகரும தலைவரும் ஆன ஸ்ரீ சிவானந்த ஞான தேசிக சுவாமியவர்களால் பாடப் பெற்றது

இப்பதி தன்னி லோர்கா லிந்திர னவத ரித்துத்
தப்பித மனைத்தும் நீக்கித் தவம்பல பகலி ழைத்துச்
செப்பிய தன்பே ராலே தீர்த்தமும் மூர்த்தி கண்டு
கப்பிலாப் பூஜை செய்து கதிதனை நண்ணி னுல். 13

கோதமன் மரீசி முன்னுங் குலமுனி வசிட்ட ரோடு
மேதமில் கவுசி கப்பே ரியன்முனி புலத்தி யன்ருன்
கோதறு சவுன காதி குறைவறு முனிவர் மன்னர்
மாதவ மியற்ற முன்னுள் வதிந்ததிப் பதியென் பாரே. 14

வில்வத்தின் வனமா மித்தை விரிவுறக் கூறக் கேண்மின்
எல்கையோர் காத தூர மெழிலுறு வகல நீளம்
அல்கள னுரையுங் கோயி லைம்பதி னென்று மாயன்
தொல்பதி பதினெட் டாகும் தொண்டர்தம் மடமீ ராறே. 15

அத்தியின் வத்தி ரர்க்கு ஆலயம் நூற்றெட் டாகும்
சத்திவே லவர்க்கீ ரெட்டாஞ் சத்தியா லயம்பன் னென்ரும்
சந்திர முவா ருகுந் தர்மசா லையுமீ ரேழாம்
மெத்திய பாடசாலை வியப்புற வீரைந் தாமே. 16

கோமடம் பதினென் ருகுங் கோலமா மடமு மேழாம்
தேமலர்க் காவி னங்கள் சிறப்புற விருபத் தொன்ரும்
பூமரு சிறுவர் கற்கும் புகழ்ப்பள்ளியிருபத் தைந்தாம்
காமரு ராஜ வீரர் கற்குஞ்சா லையுமோ ரைந்தே. 17

மறையவர் தெருவும் ராஜ மன்னவர் வீதி தானும்
நிறையுறும் வணிகர் வேளாண் நீள்மறு களவி லாதாம்
இறையவர்க் கெல்லிற் கங்கு லியலறு காலந் தன்னில்
மறைகளா கமத்திற் சொன்ன வழிமுறை பூஜை யாமால். 18

நாயனாரின் சிறப்பு

மதுரையம் பதியின் மேய மாறனும் பாண்டி யற்கு
விதிமுறைக் கணக்க ராயும் விபுதராம் புலவ ராயும்
மதிபெறு மமைச்ச ராயும் மாண்பொருட் டலைவ ராயும்
வதிதலா வித்த லத்தில் மாறன்கோத் திரமொன் றுண்டு. 19

கள்ளாமை கள்ளுண் ணாமை காமத்தைக் கடந்து நிற்கை
யெள்ளாமை கொலைசெய் யாமை யிகழ்புலாலுண்ண லின்மை
தள்ளாமை யுலகைப் போற்றுந் தாளாண்மை வாய்மை செம்மை
வெள்ளாண்மை முதலாக் கொண்ட வெள்ளாளர் குலத்து ளாமே. 20

இத்தகை மாண்பு மாற னியலுடைக் குலத்து வந்தோன்
சத்தியந் தருமம் தானம் தயைபொறை யடக்கந் தூய்மை
வித்தைநல் வினயங் கேள்வி விண்ணவர் பூஜை நோன்பு
பத்தர்க ளுறவு மேலாம் பண்பெலா முருவ மானோன். 21

ஏகமா யசல மாகி யெங்கணு நிறைந்த தாகி
நாகமு மண்ணுங் கீழும் நாடொணுப் பொருள தாகிச்
சோகமா மனத்திற் கெட்டாச் சுயஞ்சோதி யான வொன்றை
யோகமாய் மனதிற் காணு முத்தம தவத்த னானோன். 22

இந்திர போக மென்ன வியனலம் பலவா யுள்ளோன்
சந்திர மாறன் றந்த தவமகன் தூய ராஜ
இந்திர மாறன் என்போ னிளமையிற் கலைகள் கற்றுச்
சுந்தர வதனி ளூரும் பிகையினைத் துணையாய்க் கொண்டான். 23

அருமறைக் கிழவர் மேலா மடியவர் சிவவே டத்தார்
திருமுறை பாடு வோர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தோர்
தெருண்மிகு சிவஞா னத்தார் தேசிகத் தன்மை பூண்டோர்
ஒருவரு மொழியா தெங்க ளுணவையே யுண்ண வாரீர். 24

என்றுமே மறைகள் சாற்றி யிருபோது முனைவ ஸிப்பார்
துன்றிய பிரம சாரர் துறவிகள் வனவா சத்தார்
தென்றிசை யுள்ளா ரொக்கல் தெய்வந்தான் விருந்தி னர்க்கும்
ஒன்றவே யுபச ரிப்பா ருறுதுணை யறவோர்க் காவார். 25

(தொடரும்)

கற்றதனுல் ஆய பயன்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் அவர்கள்,
ஆசிரியர்,
விசூர் கிராமம்,
மானும்பதி (அஞ்சல்)
(வழி) உத்திரமேரூர், CH, Dt.

"கற்றதனுல் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"

என்பது தெள்ளுதமிழ்ப் பாவலர் பொய்யில் புலவராம் வள்ளுவனரின் வாக்காகும். "கடலுலகில் உற்றபொருளுக்குளே கல்வி நிலைபெற்ற பொருள்" என்பதை உணர்ந்து நிலையற்ற இந்த யாக்கையினுல் நிலையான புகழைப் பெறக் கல்வி இன்றியமையாததாகும். கல்லாமையினுல் வரும் இழிவைப் போக்கி கல்வியினுல் பெறும் பயனே சாலச் சிறந்ததாகும். எனவே தான் நற்சுவை மிக்கப் பொற்புடைப் பாடலாம் வெற்றிவேற் கையில் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே" எனறு அற்புதமுடன் கல்வியின் இன்றியமை யாமையைப் பற்றி இயம்பினர். மேலும் கல்வியின் சிறப்பை "ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக வென்னுது அவருள் அறிவுடையோனுரரசும் செல்லும்," என்ற புற நானூற்றுப் பாடலாலும் அறியலாம். கல்வி, கேள்வி, ஒழுக் கங்களிலே சிறந்து விளங்கிப் பல நூல்களையும் ஆய்ந்துணர வேண்டும். அவ்வாறு ஆய்ந்து உணரப்படும் நூலானது அல்லன நீங்கி நல்லனவாக இருத்தல் வேண்டும்.

ஆசறு நூல்களை மாசறு மனத்தினராய் நின்று ஓதி செந் தமிழ்க் காப்பியங்கள் காட்டும் செந்நெறியிலே சென்று ஒழுக வேண்டும். இதனையே, நள்ளாரும் போற்றும் வள்ளுவர்

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று கூறினர். எனவே இப்படிப்பட்ட மெய்நெறிகளையெல்லாம் செம்மையாக ஓதியும், "முற்றப் பகலில் முனியாது இனிது ஓதிக் கற்றலிற் கேட்டலே நன்று" என்ற பழமொழியின் படியும், "கேள்வி முயல்" என்பதற்கு ஒப்பவும் நல்லோர் கூறும் நற்றமிழ் விளக்கங்களையும்கேட்டு நனிசிறந்து விளங்க வேண்டும். விளை நிலத்து நெல்லின் விழுப்பத்தைவிட உவர் நிலத்தின் உப்பு எவ்வாறு சிறக்குமோ அதைப்போல "கடை நிலத்தோராயினும் கற்றறிந்தோரைத் தலை நிலத்து — வைக் கப்படும்," என்ற நாலடியார் பாடலுக்கிணங்க இழிநிலையால் உண்டாகும் பழியைப் போக்கி குன்றின் மேலிட்ட விளக்கெனக் குன்ரு ஒளியுடன் திகழச் செய்வது கல்வியே யாகும்.

பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்று, அப்பிறவியின் தன்மையை உணர்ந்து, குற்றமறக் கற்றுத் தேர்ந்துவிட்டால் மட்டும் போதாது. ஏனெனில் "நிறை குடம் நீர் தளும்பல் இல்" என்பதற்கு ஏற்ப ஏற்றமுடன் விளங்கினும் உலகத்தின் தன்மையை அறிந்து ஒழுகாமல் போனல் கற்றபயன்யாவும் புல்லுக்கு இறைத்த நீருக்குச் சமமாகும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்ருர் அருமறை தந்த பெருநாவலர் அவர்கள்.

இவ்வாறு பல்லோரும் போற்றும் நல்லோராக எல்லா வற்றினும் மேம்பட்டு விளங்கினும் இப்பூதஉடலால் யாதொரு பயனும் இல்லை எனக் கருதிப் புகழுடம்பு பெற மெய்ஞ்ஞான நெறிகளைப் பின்பற்றி ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களிலிருந்து விடுபட வேண்டும். "இன்றைக்கு இருப்பார் நாளைக்கு இருப்பார் என்று எண்ணவோ திடமற்றது இந்த யாக்கை," "நெருநல் உளனொருவன் இன்று இல்லை என்னும் பெருமை யுடைத்து இவ் வுலகு" என்ருர் செந்நாப் போதார்.

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா"

என்று யாக்கையின் நிலையற்றத் தன்மையை ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றும் மணிமேகலை அணிசெய்து இயம்புகின்றது. எவ்வளவுதான் செல்வச் சிறப்போடு வாழ்ந்தாலும் நாம் காணுமல் குறிக்கப்பட்ட காலம்குறுகி காலன் வரும்போது அரசு அறிய வீற்றிருந்த வாழ்வாக இருந்தாலும் வீழ்ந்துபடும். ஆகவேதான் "ஆற்றங்கரையின் மரமும் அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்" என்று பாடி முடித்தனர். ஆண்டு அனுபவித்த அடியவர்களும் "அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் அரங்கமா நகர் ஊருறைவானே" என்று பாடித்துதித்தனர். இதனையே தான் தண்டமிழ் மூதாட்டி,

"முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்காலரைக் கால் கண்டஞ்சாமுன் — விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றேது.

என்று கூறினர்.

நீரிற் குமிழி போன்றது யாக்கை, "புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்கு மூடி, மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை, மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்து" ஆனது இவ்வுடம்பு எனவே தான் அரிச்சந்திர புராணம் போந்த நல்லூர் வீரராகவக் கவிராயரும் யாக்கையின் நிலையைக் கூறுமிடத்துப்

"புலையனும் விரும்பாத இப்புன் புலால் யாக்கை" என இழித்துக் கூறியுள்ளார். கண்ட பொருள்களின் மேல் ஆசை வைத்து உண்டு உடலை வளர்த்துக் கொண்ட சுகம் ஏதும் இன்றிக் கண்ணிருந்தும் குருடராய் வாழும் வாழ்வை விட்டு "வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம்" என்ற சுந்தரரின் வாக்கை நினைந்தும் கற்றதனுல் ஆய பயன் கடவுளை வணங்குதல் என்பதனை இதயத்தில் இருத்தி நித்தம் துதித்துப் "பூக்கையால் அட்டிப் போற்றி என்னுத இவ் வாக்கையால் பயனென்" என்பதை மனதில் கொண்டு கடவுள் பக்தியில் சிறந்து வாழவேண்டும்.

"ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்" பண்பிற் சிறந்த அன்பர்கள் உள்ள இப்பூவுலகில் அனைத்திற்கும் காரணமாய்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

கண்ணுதலான் காதல்

பாலகவி வயிநாகரம்
திரு வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தத்புருஷ தேசிகர், தேவகோட்டை.

உலகத்திலுள்ள சித்தும் சடமுமாகிய எல்லாப் பொருள்களிலும் நிகழும் இயக்கங்களுக்குச் சிவ பெருமான் அவற்றுடன் ஒன்ருகியும் உடனுகியும் தொடர்பு கொண்டிருப்பதே காரணமாகும். சடப் பொருள்களின் இயக்கம், சித்துப் பொருள்களினுலேயே ஆவதென்பதைக் காட்சியளவையாகிய பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றே காட்டி விடும். ஆனல் சூக்கம சித்தாகிய உயிரின் இயக்கம், அதிசூக்கும சித்தாகிய இறைவனுலேயே நிகழ்ந்து வருகின்ற தென்பதைக் கருதலளவை உரையளவைகளாகிய அனுமானப் பிரமாணம், ஆகமப் பிரமாணங்கள் கொண்டே அறிய வேண்டியதாயிருக்கின்றது.

இங்ஙனம் இறைவன் எல்லாப் பொருள்களுடனும் ஒன்ருயும் உடனுயும் இருந்து உதவி புரிந்து வருவது, அவன் உயிர்களிடத்தில் வைத்த ஒப்பற்ற பெருங் கருணையினுலேயேயாம். அறியாப் பருவத்தை யுடைய குழந்தையின் நற்பேற்றில் கவனம் வைக்கின்ற அன்னையினது விருப்பமும், ஆன்மாக்களாகிய

'திருக்கோயில்' ஆசிரியர் அனுமதி பெற்று இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

(முன் பக்கத்தொடர்ச்சி)

விளங்கும் ஆதிமுதல்வனை இதயாசனத்தில் இருத்தி அதனுல் ஈன்ற இன்ப அமுதத்தை உண்டு ஆனந்தக் கடலில் மூழ்கி "அவனருளாலே அவன்தாள் வணங்கி" மாலயற்கு அரிய நாதனைச் சாலவே பணிந்து இறைவன் திருவருள் பெற்று இன்புறுவோமாக.

நமது நற்கதியில் கருணை கொள்ளுகின்ற ஆண்டவனது விருப்பமும், ஏறக்குறைய ஒத்த தகுதியை யுடையன. வேண்டுதல் வேண்டாமை யில்லாத அவனுக்கு விருப்ப வல்லமையாகிய 'இச்சா சத்தி''யும் உண்டென்று அருள் நூல்கள் கூறுகின்றன. உயிர்களுக்குப் போல இறைவனுக்கும் இச்சை யுண்டென்பது உண்மையேயாயினும், இறைவனது இச்சை உயிர்களது இச்சையைப் போன்று தன்பயன் குறித்து நிகழுவதன்றும்.

ஆன்மாக்களாகிய நம்முடைய இச்சை, நம் பயன்குறித்ததாக எழுந்து, நமது ஞானக் கிரியைகளை வசப்படுத்தி நின்று ஏவல் கொள்ளும். இறைவனது இச்சையோ, அங்ஙனமின்றி அவனுக்கு ஏதும் பயன் தராததாய், ஆன்மாக்களாகிய நமக்கே பயன் தருவதாய், அவனது ஞானசத்திக் கடங்கியதாய், அந்த ஞானசத்தியின் ஏவலைக் கிரியா சக்தியைக் கொண்டு நிறைவேற்றுவதாயிருக்கும். அவ் விச்சா சத்திக்கு ''எல்லா ஆன்மாக்களும் ஈடேறி உய்தி பெறுதல் வேண்டும்'' என்ற ஒன்று மட்டுமே குறிக்கோளாயிருப்பதாதலின் எந்தக் காலத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் இறைவன்பால் அது ஏற்றத் தாழ்வுகள் உடையதாய் நிகழுவதில்லை.

சிவசத்தியினது சொரூபம் கூறவந்த சிவஞான சித்தியார் "சக்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்" என்று அருள் செய்தது. "உயிர்கட்கு அநுக்கிரக மாத்திரங் குறித்துப் பொதுவகையான் அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞான மொன்றே சிவசத்தியின் சொரூபம்" என்று இதற்கு உரை கண்டனர் சிவஞான சுவாமிகள். மேலும் சிவபெருமானது ஞானத்தின்வழிபட்டே அவரது இச்சை கிரியைகள்நிகழ் வன என்பதைச்சிவஞான சித்தியார் ''எத்திறம் ஞானம் உள்ளது அத்திறம் இச்சை செய்தி" என்று உணர்த்தியருளுகிறது.

சிவசத்தி, பராசத்தி, தடையிலா ஞானம் என்பன வாகிய வற்ருல் குறிக்கப் பெறும் அருட்சத்தி ஒன்றே, தொழில் வேறுபாடுகளால் இச்சா சத்தி ஞானசத்தி கிரியா சத்தி என மூன்ருகியும், இன்னும் பல திறப்பட்டும் நிற்கும். அவ் விச்சா ஞானக் கிரியைகள் உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவத்தை அளித்தலில் வைக்கும் கருணையும், அதற்குச் செய்யக் கடவு

தான உபாயங்களை எல்லாம் அறியும் அறிவும், அவற்றை அவ்வாறே செய்யும் சங்கற்பமுமாக நிகழ்வனவாம். இதனை "ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை யென்றெரு மூன்றாகி, நின்றிடும் சத்தி இச்சை உயிர்க்கருள் நேசம் ஆகும்" என்ற சிவஞான சித்தியார் வாயிலாக உணரலாம்

இங்ஙனம் பல வழிப்படாமலும், ஏற்றத் தாழ்வுகளை அடையாமலும், ஒரே படித்தாயிருக்கின்ற இறைவனது இச்சா சத்தி, உயிர்களுக்கு அருள் புரியும் நேசமாகின்ற ஒன்றேயாக அமைந்திருப்பதாலும், அவனது ஞானக்கிரியா சத்திகளும் அவ்விச்சா சத்தியின் வழிநின்று அருள் நேச அடிப்படையிலேயே தொழிற்படுவதாலும் இறைவனுக்குரிய எண் குணங்களுள் பேரருளுடைமை என்ற ஒன்று இடம் பெற்றுள்ளது.

அறிவிச்சை செயல்களைத் தம் பயன் கருதாது பிறர் பயன் கருதியே செலுத்துகின்ற பேரருள், இறைவன் ஒருவனுக்கே தனிச் சிறப்பாய் அமைந்ததாகும். உயிர் வர்க்கத்தினராகிய மற்றைத் தேவர்கள் பாலும் மானிடர் பாலும் மற்றவர் பாலும் இந்தச் சிறப்பு எப்போதும் அமைவது கிடையாது. இது கொண்டு இறைவனாகிய சிவபெருமான் ஒருவனே எல்லோருக்கும் தலைவன் என்பதை எளிதில் தெரிந்து கொள்ள முடியும் என்றாலும், எத்துணைபேர் இதனை அறிந்திருக்கின்றனர்? இது பற்றி இரங்கிப் பேசுகின்றது, திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்தின் பன்னிரண்டாவது செய்யுள்! அது,

> கண்ணுத லாமொரு காதலின் நிற்கவும்
> எண்ணிலி தேவர் இறந்தார் எனைப்பலர்
> மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
> அண்ணல் இவனென் றறியகி லார்களே

என்பதாகும்.

சிவபெருமானது உருவத் திருமேனியில் அவனது பரத்துவ உண்மையைப் புலப்படுத்துவன நெற்றிக் கண்ணும், நீலகண்டமுமாம். நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்து இச்சை வழிப்படும் இயல்பு தனக்கில்லை என்பதைத் திருமால் பிரமனாகிய தேவரும் ஏனையோரும் உணரும்படி சிவபெருமான் செய்த வரலாறு புராணங்களில் கேட்கப் பெறுகின்றது. உயிர்கள்

உய்தி பெறவேண்டுமென்னும் இச்சை இறைவன் பாலுள்ள தெனவே அதுபோல் மற்ற இச்சைகளும் அவன்பால் உள் ளனவோ என மயங்காதிருத்தற் பொருட்டு ஆசிரியர் திருமூல தேவ நாயனுர் 'கண்ணுதலான்' என்ற பெயரால் இத் திருப் பாடலில் இறைவனைக் குறித்தருளினுர்.

இச்சை அன்புடன் கூடுகிறபொழுது காதல் என்று அதனைச் சொல்லுகின்ருேம். இறைவன் அருள் வயத்தாற் கொள்ளுகின்ற இச்சையாகிய காதல் ஒன்றேயாக உள்ள தென் பதை "ஒரு காதலின்" என்பதனுலும், அவ்விச்சையை நிறை வேற்றியன்றி ஒய்வு பெற விரும்பாதவனுய் இடையீடில்லாமல் அவன் ஐந்தொழில்களை ஆற்றி வருகின்ருன் என்பதை "நிற் கவும்" என்பதனுலும் ஆசிரியர் உணர வைத்தார்.

பிறப்பு, இறப்பை யுடையவர்கள் பசுக்கள். யாருக்கு அவை இல்லையோ அவர் பதி என்பது வேதாகம முடிபு. பதி யாகிய பரமசிவனது திருவருளினுற் கிடைத்த பதவிகளைப் பெற்று எண்ணில்லாத தேவர்கள், ஆட்சி பீடத்தில் இருந்து வருகிருர்கள். என்ருலும் அவர்கள் அப்பதவியில் நிலையாக நிற்கக் கூடியவர்கள் அல்லர். தேவரனைவரும் அவரவர் பதவி களை விட்டு நீங்கியதும், பதவிகள் அவர்களை விட்டு நீங்கியது மான வரலாறுகள் பலவற்றை நாம் கேட்டிருக்கின்ருேம. இறப்பினுற் பதவி நீக்குவது மட்டுமன்றி இடைக் காலத்திலும் அது நீங்கி விடுவது எங்கும் காணப் பெறுகின்றதல்லவா? அத ஞலேயே 'எண்ணிலிதேவர் இறந்தார்' என ஆசிரியர் அருளிச் செய்தார்.

உயிர்த் தொகைகள் எண்ணற்றன. அவைகள் வாழும் இடங்களில் சிறப்புடையவை மண்ணகமும், வானகமுமாகிய இரண்டுமேயாம். மண்ணகம், மனம் வாக்கு காயங்களால் சிவபெருமானுக்குப் பணி செய்து பிறவா நெறி பெறுவதற்கு வாய்த்த இடம். வானகம், பசு புண்ணியத்தால் கிடைக்கும் போக போக்கியங்களுக்குரிய இன்பத்தினை வழங்கும் இடம். மற்ற எல்லா இடங்களையும் நோக்கச் சிறந்தனவாக உள்ள இவ்விரண்டு உலகங்களிலும் வாழுகின்றவர்களே அறியாமை யாற் பீடிக்கப்பட்டு உண்மை காணுது உழல்வார்களாயின் ஏனையோரின் நிலைபற்றி என்ன சொல்ல இருக்கிறது?

பாவ புண்ணியங்களைச் செய்து அதன் பயன்களாகிய இன்ப துன்பங்களை நுகருவதற்குப் பலர் மண்ணகத்தில் வந்து பிறக்கின்றார்கள். பசு புண்ணியங்களே மிக உயர்ந்தவை எனக் கொண்டு அவற்றையே முழுவதும் செய்து பலர் வானகத்தை அடைகின்றார்கள். இவ்விரு தகுதியினரும் மீண்டும் மீண்டும் பிறந்திறந்துழலும் கீழ் நெறியில் நிற்பவரேயாவர். இறைவனது பொருள் சேர் புகழைப் புரிந்து இருள்சேர் இருவினையும் சேராது உய்தி பெறுவதே இவரது கடமையாயிருக்க, அதனை விடுத்து மண்ணுறுதலும் வானுறுதலுமாகிய இவற்றில் மாறி மாறி உழல்வது எவ்வளவு அறியாமை?

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாதவராய்த் தீவண்ணர் திறத்தை ஒரு காலேனும் பேசாதவராய் ஒரு பொழுதேனும் திருக் கோயிலுக்குச் செல்லாதவராய் உண்பதற்கு முன்னர் மலர் கொய்து சாத்தி உண்ணாதவராய், அரிய நோய்கள் நீங்கும்படி திருவெண்ணீற்றை அணியாதவராய் யாரேனும் இருப்பார்களாயின் அவர்களது இறப்பு மீண்டும் பிறப்பதற்குக் காரணமாய் அமையும் என்று அப்பரடிகள் அருளுகிறார்கள். இங்ஙனம் பிறப்பிறப்பிற் கிடந்துழலும் உயிர்களின் அறியாமை நீங்க வேண்டுவதும், அது நீங்குதற்குரிய உபாயத்தை அறிந்து கடைப் பிடிக்க வேண்டுவதும் மிக மிக இன்றியமையாதனவாகும். தெய்வப் புலவராகிய திருவள்ளுவ தேவ நாயனார் 'பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருளானாம் மாணாப் பிறப்பு'' என்றும், ''நில்லா தவற்றை நிலையின என் றுணரும், புல்லறி வாண்மை கடை'' என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

நிலையில்லாதவர்களை நிலையானவர்களாகவும், பொருளற்றவர்களைப் பொருளாளர்களாகவும் கொள்ளுதல் அறிவுடைமையாகாதது மட்டுமல்ல; பிறப் பிறப்பிற்கும் காரணமாவது என்பது அறிய வேண்டுவதாகும். பிறப்பை நீக்கிக் கொள்ளுதற்குரிய உபாயம், நிலையான தலைமைப் பொருள் சிவபெருமானே யென உணர்ந்து அவருக்குச் செய்யக் கடவனவாகிய வழிபாடுகளை விதிப்படி செய்வதே யாகும். இதனை அறிந்து கடைப் பிடித்தற்குரிய காதலும் மதுகையும் உடையவர் மிகச் சிலராக வன்றோ உள்ளனர்? எனவே தான் அவரல்லாத பெரும்பாலானவரைக் கண்டு ''அண்ணல் இவனென்று அறியகிலார்களே'' என்று ஆசிரியர் இரங்கியருளுகின்றார்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

செத்திலாப்பத்து

இனி, செத்திலாப்பத்தாவன:—

பொழிப்புரையநுபூதி:—

முற்பதிக வுண்மை அநுபூதியில் அருளியதில் உடல் உயிர் இரண்டும் அநாதியே; உடல் கோவிலாகில், மலம் அமைந்து அகலா மரபுண்டோ? என, கரணங் கெடாததலால் அவ்வாசனை நீங்க, அருளாம் வகையை அன்பாலின்புறப் பண்பாய்ச் சிவத்தால் நண்பாய்த் திருவடியானதைக் கண்பாலின் புறக் கண்டதருளியதெனக் காண்க.

திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந் துறையிலோதிய தெனக் காண்க.

இனி, பொய்யனேன் அகநெக வெழுந்தருளிய திருவடி ஞான வின்பமென்ற (தி.-ன.)!—

பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்தும்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தேன்
ஐயனே யரசே யருட்பெருங் கடலே
அத்த னேயயன் மாற்கறி யொண்ணுச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரு. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

SATURN TEMPLE AT TIRUNALLARU

N. Ramakrishna

SATURN is the most feared planet of all the Nava Grahas and people offer worship to Him every now and then, especially when they pass through his Dasa or Bhukthi astrologically.

When Saturn moves from one zodiacal sign to the next which comes off once in two and a half years, a festival is celebrated at Tirunallaru in Tamil Nad near Karaikal (Pondicherry State) where there is a unique temple dedicated to Lord Sanaischara, familiarly known as Saneeswara.

Sanaischara means one who moves slowly and the Lord is said to be a bit limp in his gait. He takes more time than the other eight planets to move from one zodiacal sign to the next.

(முன் பக்கத்தொடர்ச்சி)

(இ-ள்). ஆண்டவனே! தேவரீர், திருவுளமிரங்கிப் புதிய தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளையுந் திருவருளாற் காட்டியதால், அக் கருணை வாசனை ஒய்வில்லாத பொய்யன் மன நெகிழ, இன்பவமிர்த முறிய அருமையன்பு தெரியாது, விழித்திருந்தவன் கைப்பொருளிழந்தவண்ணம், எனதுள்ளம் அதுவாய்ப் போன வண்ணங் காணேனே! ஆன்ம நாதனே! இறையே! திருவருட் கடலே! எனதப்பனே! திருமால் பிரமன் அறியாத சிவந்த தீ வண்ணனே! சுவாமி! தேவரீர் பஞ்சகிர்த்திய வுண்மை யறிவதற்கறிவுளவோ? என்று, தம் வலியினாற் கருத இவனாரென வருளியதைக் காண்க. வஞ்ச மனத்தனான பாவி இவ்வுலக மறியத் துஞ்சினேனோ என்ற ஆராமையை யருளாற் காண்க,

In the above temple, the other planets are absent.

The story of Nala and Damayanti is familiar to every Hindu. Damayanti refused to wed one among the Devas and chose Nala instead. This enraged the Devas and they subjected Nala to all hardships with the help of Saturn.

Finally at Tirunallaru, Nala was released from the clutches of Saturn when he took his bath at what is now known as Nala-Thirtha and offered worship at the temple of Dharbharanyeswarar, Lord of Dharbha (or the sacred grass Kusa), presiding deity of that place. The Goddess goes by the name Praneswari.

Adjoining the shrine of the Goddess, there is the temple of Saturn.

There is a small idol in a niche in the wall. The deity is covered with the golden kavacha and every Saturday is an important day for that temple.

His Highness, the Maharaja of Mysore. has presented the deity with a couple of eyes studded with precious stones.

Tirunallaru is one among the Sapta-Vidanga Kshetras (the seven places of importance) where Muchukunda Chakravarty established the sacred Lingas he got from Devendra.

There is a fine Emerald Linga which is kept in a box and shown to devotees. It is not man-made.

The shrine of Thyagaraja is important. The Linga goes by the name Naga Vidanga and the Dance exhibited is known as Unmatha Natana. The spouse of Thyagaraja is known as Neelothpalamba.

The sacred thirtha goes by the name Nala-Thirtha and devotees take their oil bath in it, then sprinkle

water from the nearby well, known as Nalacoopa on their heads. The river Ganga is said to have flown into the well for the sake of Nala. Then they go to the temple and offer worship, burning gingili oil lamps and offer gingili seeds to Vedic Brahmins.

On Sani's transit-day, lakhs and lakhs of people visit Tirunallaru.

It is a temple of all-India interest, for who is not afraid of Saturn?

Saints like Tirunavukkarasu, Thiru Gnanasambandar and Sundaramurty Nayanar have sung the praises of the presiding deity here. Saint Arunagirinathar has sung some songs too.

There is a Vaishnavite temple dedicated to Nala-Narayana here and draws large crowds on Vaikunta Ekadasi day.

The mount of Saturn is the Crow and there is a silver vahana of the crow here. The deity is taken out in procession on festive occasions.

Tirunallaru temple is managed by a Committee headed by the Administrator of Karaikal. His Holiness of Dharmapuram Adhinam is a member and a representative of the Adhinam is in charge of the daily rituals of the temple.

Presently a Koti Archana to Lord Sani is in progress here.

(To be continued)

The above article is reproduced with the kind permission of the Editor, Bhavan's Journal and Mr. N. Ramakrishna the author of the article.

ஸ்ரீவைகுண்டம் சோடசவிநாயகர் வகையரு நித்திய பூசை நிதி நிலப்பெறுமானம் ரூ. 20000/

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

என்றும்,

பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி யென்னும் களிறும்

என்றும், இன்னோரன்னவாறு திருமுறைகளில் குறிப்பிடப்பெற்ற விநாயகப் பெருமானுக்குரிய

1. குழந்தை வடிவு, வாழை மா பலா கரும்பு ஏந்திய நான்கு கைகள், துதிக்கையில் மோதகமுமுடைய, பால சூரியன் போன்ற பாலகணபதி,
2. பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், ஒடிந்த கொம்பு, நெற்கதிர் கரும்பு துண்டு ஏந்திய எட்டுக் கைகளுடன் பகல் சூரியன்போன்ற தருணகணபதி,
3. வெண்ணிறம், தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயசபாத்திரம் ஏந்திய நான்கு கைகளுடன் பக்தி கணபதி,
4. வேதாளம் வேல் அம்பு வில் சக்கிரம் கத்தி கேடயம் சம்மட்டி கதை அங்குசம் நாகம் பாசம் சூலம் குந்தம் மழு, கொடி தாங்கிய 16 கைகளுடன் வீரகணபதி,
5. அபயஹஸ்தம், பாசக்கயிறு, புஷ்பமாலை தாங்கி அம்பிகையை அணைந்த கைகளுடனுள்ள சக்தி கணபதி,
6. நான்கு யானைமுகங்கள், புத்தகம் ருத்ராக்ஷமாலை தண்டம் கமண்டலம் கொணடு வளையல்கள் தரித்துள்ள த்வஜகணபதி,
7. மாங்கனி பூங்கொத்து கரும்புத்துண்டு பரசு ஏந்திய நான்கு கைகள், துதிக்கையில் எள்ளுருண்டை, பொன னிறமுடைய சித்தி அல்லது பிங்களகணபதி,

8. நீலோற்பலம் மாதுளை வீணை நெற்கதிர் ருத்ராக்ஷ மாலை கயிறு ஏந்திய ஆறுகைகள், நீலவர்ணமுடைய உச்சிஷ்டகணபதி,

9. பாசம் அங்குசம் தந்தம் மாம்பழம் ஏந்திய நான்கு கைகள், பொன்நிறமுடைய விக்னராஜகணபதி,

10. தந்தம் கொடி பாசம் அங்குசம் ஏந்திய நான்கு கைகள், ரத்தினகும்பம் ஏநதிய துதிக்கை, செம்பருத்தி மேனியுடைய க்ஷிப்ரகணபதி,

11. ஐந்து யானைமுகங்கள், அபயவரதக்கைகள், பாசம் தந்தம் ருத்ராக்ஷம் ஹாரம் பரசு சம்மட்டி மோதகம் பழம் தாங்கிய எட்டுக்கைகள், பசுமைகலந்த கருமை நிறம், சிம்மவாகனத்துல் ஹேரம்பகணபதி,

12. கிளி மாதுளை கலசம் அங்குசம் பாசம் கற்பகக்கொடி கட்கம் வரதம் உடைய எட்டுக்கைகள், வெண்மை நிறம், நீலத்தாமரை ஏந்தி இரு தேவிகளுடன் லக்ஷ்மீ கணபதி,

13. மாதுளை கதை கரும்பு தாமரை நீலோத்பலம் நெற்கதிர் வில் சக்கரம் பாசம் தந்தம் உடைய பத்துக்கைகள், துதிக்கையில் ரத்னகும்பம், மடிமீது தேவி முக்கண் உடைய மஹாகணபதி,

14. சங்கு கரும்புவில் புஷ்பபாணம் கோடரி பாசம் சக்கரம் கொம்பு மாலை பூங்கொத்து பாணம் உடைய பத்துக் கைகள், ஆபரணங்கள் தரித்த பொன்மேனியுடைய புவனேசகணபதி,

15. நர்த்தனம் செய்துகொண்டு, மோதிரம் அணிந்த கை யோடு, பாசம் அங்குசம் கொழுக்கட்டை கோடரி ஒடிந்த தந்தம் கொண்ட ஆறுகைகள், கற்பக மரத் தடியில் நிருத்தகணபதி,

16. நீலப்பூ நெற்பயிர் தாமரை கரும்புவில் பாணம் தந்த முடைய ஆறுகைகள், பொன்னிறம், பச்சைநிற தேவி யுடன் ஊர்த்துவகணபதி

என்று விவரிக்கப்பெறுகிற /சோடச/ பதினாறு மூர்த்தங்கள் ஒருங்குள்ளதாய் ஸ்ரீவைகுண்டத்தில் அமைக்கப் பெறவுள்ள சோடசவிநாயகர் வகையரு நித்திய பூசைச் செலவுக்காகத்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமக் கட்டளை நிறுவப்பெற்றது. இது 'ஸ்ரீவைகுண்டம் சோடசவிநாயகர் வகையரு நித்திய பூசை நிதி' எனப் பெயர் பெறும்.

2. தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட்டு, திருவிடைமருதூர் சப் ரிஜிஸ்தரைச் சேர்ந்த 44ந் சூரியமூலை கிராமத்தில் நமக்குச் சொந்தமாய் நம்பேரில் பட்டாமிராசுடன் நாம் சர்வ சுதந்திரமாக அனுபவித்து வருகிறதும், திருலோக்கி கிராமம் ரி. சர்வே. நெ. 216, 221 நன்செய்களுக்குக் கிழக்கு, திருலோக்கி ரி. சர்வே. நெ. 225 நன்செய்க்குத் தெற்கு, சூரியமூலை ரி. சர்வே. நெ. 184ல் 1 நத்தம், 184-3 பட்டா நன்செய் ரி. சர்வே. நெ. 185-1 கட்டை ஏரி இவைகளுக்கு மேற்கு, சூரியமூலை ரி. சர்வே. நெ. 182 கன்டியன் பழவாற்றுக்கு வடக்கு, இவற்றுக்குட்பட்டதுமான

ரி. சர்வே. நெ. 183-0	ஏக்கர் 4	செண்ட் 18,
ரி. சர்வே. நெ. 184-2	0	செண்ட் 66
ஆகக்கூடுதல் நன்செய்	ஏக்கர் 4	செண்ட் 84

ஏக்கர் நான்கு, செண்ட் எண்பத்து நான்கும் பின் மூன்ருவது பாராவில் விவரித்துள்ளவாறு தருமம் செய்ய ஒதுக்கப் பெற்றுள்ளது. இந்த நிலத்தினின்று வரும் ஆண்டு வருமானத்தில் சர்க்கார் கிஸ்தி, கிராம சிப்பந்திகள் செலவு, கிராம சமுதாயச் செலவு, மராமத்துச்செலவு, நிர்வாகச்செலவு முதலிய செலவுகள் போக எஞ்சிய வருமானம் இத்தருமத்துக்குச் செலவு செய்யப் பெறவேண்டும்.

3. அ. நம்மால் ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்துக்குச் சொந்தமான இடத்தில் சோடச விநாயகர் வகையரு பிரதிஷ்டை செய்யப்படவிருக்கிறது. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ சோடசவிநாயகர் பிரதிஷ்டையானது முதற்கொண்டு ஷ வருமானம் சோடசவிநாயகருக்கு நித்திய பூசை நடத்தவும், விநாயகசதுர்த்தி முதலான நைமித்திய பூசைகள் நடத்துவதற்காகவும் பயன்படுத்தப்பெறவேண்டும்.

ஆ. ஸ்ரீவைகுண்டத்தில் சோடச விநாயகர் பிரதிஷ்டை செய்யப்படும் வரையில் இந்நிலத்து நிகர வருமானம் ஸ்ரீவை

குண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம் திருப்பணிக்காகச் செலவு செய்யப்பெறலாம்.

இ. ஸ்ரீவைகுண்டத்தில் சோடசவிநாயகர் வகையரு பிரதிஷ்டைசெய்ததும் சோடசவிநாயகருக்கு நித்தியநைமித்திக பூசைச் செலவுகளுக்காக இந்நில நிகர வருமானம் பயன்படுத்தப்பெற்று வரவேண்டும். இச்செலவு போகத் தொகை எஞ்சியிருப்பின் எஞ்சிய தொகை சோடசவிநாயகர் கோயில் விருத்தியாம்சத்துக்காகவும் இன்னும் தொகை எஞ்சினுல் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம் திருப்பணிக்காகவும் செலவு செய்யப்பெறவேண்டும்.

4. ஷை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மடத்து மானேஜிங் டிரஸ்டி அவர்கள் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ சோடச விநாயகர் வகையரு நித்திய பூசையைச் சரிவர நடத்தச்செய்து வருவதோடு அது விவரம் பற்றியும், நமக்கும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களுக்கும் ஆண்டுதோறும் தெரிவித்து வர வேண்டும்.

5. இத்தருமத்தை வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கக்கூடாது. இத்தருமம் இப்போதுள்ள ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மடத்து மானேஜிங் டிரஸ்டி அவர்களாலும் அவர்களுக்குப்பின் அவர்கள் வாரிசு ஆகிய மானேஜிங் டிரஸ்டியாலும் வழிவழி நடத்தப்பெற்று வரவேண்டும்.

6. ஷை நிலம் ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மடத்து மானேஜிங் டிரஸ்டி அவர்கள் பெயரிலும், சுவாதீனத்திலும் பரிபாலனத்திலும் இனிமேல் இருந்துவரும். மேற்கண்ட பிரகாரம் அவர்களுக்குப்பின்வரும் வழிவழி மானேஜிங் டிரஸ்டி பேரிலும் சுவாதீனத்திலும் இருந்துவரும்.

7. இத்தருமத்திற்கு ஒதுக்கப்பெற்ற நிலத்தின் பெறுமானம் ரூ. 20,000/- ஆண்டு வருமானம் ரூ. 1000/-

Tirupanandal
Dated 3-3-1967 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 4-3-67 as No. 248 of 1967 of Book 1 volume 1223 pages 79 to 83.

உ

திருப்பனந்தாள் — ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ. பை
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் (புதிய பதிப்பு)	...	0 65
8*	திருக்கோவையார்–பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9*	ஒன்பதாம் திருமுறை–திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1 50
10	,, ,, மூலம் மட்டும்	...	0 56
11*	திருமந்திரம் (புதிய பதிப்பு) ,,	...	2 25
12*	பதினோராந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1 50
13*	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3 00
14	பெரியபுராணம் உரை நடை	...	2 00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0 40
16*	அகத்தியர் தேவாரத் திரட்டு	...	0 36
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3 00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2 25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
20	கந்த புராணம் – முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2 75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2 00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3 00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
26	திருக்குறள் – காமத்துப்பால் ,,		
	ஷை 24, 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் (அச்சில்)		
28	தாயுமானசுவாமிகள் பாடல் குறிப்புரையுடன்	...	1 25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
30	திருக்கைலாய ஞானவுலா– உரையுடன்	...	0 50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0 25
32	கந்தரநுபூதி மூலம் (அச்சில்)		
33	கந்தரநுபூதி தெளிவுரை	...	0 35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன் (அச்சில்)		
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0 10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும் (அச்சில்)		
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0 50
38	நீதிநெறி விளக்கம் - மூலம்	...	0 10

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd. No. M. 5574

39	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ...	0 15
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0 !3
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சி யம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம் ...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட் கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ...	0 50
48	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கில மொழிபெயர்ப்புடன் ...	1 00
49	திருக்கயிலைத் திருமுறை ...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை ...	0 15
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு ...	1 37
53	௸ ௸ பொருட்பால் 2-ம் பதிப்பு ...	2 75
54	ஐந்து நீதி நூல்கள் ...	0 10
55	ஸ்ரீ சயிலம் ...	0 10
56	திருவாசகம் குறிப்புரையுடன் (விஷய சூசனத்துடன்) பழய பதிப்பு	1 50
57	திருவாரூர்-திருப்பனுவல்கள் —	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ...	0 10
59	பழமொழித்திருமுறை ...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை ...	0 50
61	Hymns and Proverbs —	0 30
62	அப்பர்விழா வெளியீடு ...	0 25
63	நவக்கிரகமாண்பு ...	0 25
64	குமரகுருபரர் வரலாறும். அற்புதத்தேவாரத் திரட்டும் ...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 58. பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு. • இக்குறிப் [illegible] பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவா[illegible]கள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப் [illegible] நிலையைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொ[illegible] (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.